# சங்கரன்கோவில் நகராட்சி

**2019–ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 09.08.2019 ம் தேதி காலை 11.00 மணிக்கு அவசரக்கூட்டம்**

**பொருள் எண் – 729**

சங்கரன்கோவில் நகராட்சி 2019-2020ம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற சாலை உட்கட்டமைப்பு நிதியின் தேர்வு செய்து வழங்கப்பட்டுள்ள பழுதடைந்த சாலைகள் சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த திருக்கோவில், கல்வி நிலையம், மருத்துவமனைகள் செல்லும் சாலைகள் மற்றும் முக்கிய பிரதான சாலைகளை இணைக்கும் இணைப்பு சாலைகளாகவும் பேருந்து செல்லும் சாலைகளாகவும் உள்ளது. மேலும் மேற்கண்ட சாலைகள் பழுதுடைந்துள்ளதை சரி செய்ய பொதுமக்களிடம் இருந்து ஏராளமான கோரிக்கைகள் பெறப்பட்டும் மற்றும் கூட்டுக்குடிநீர் திட்டப்பணிகள் முடிக்கப்பட்டுள்ளதால் இந்நகராட்சியில் நிதி நிலை சீராக இல்லாததால் சாலை மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ள இயலவில்லை. எனவே மேற்கண்டவாறு பழுதடைந்த சாலைகள் மேம்பாடு செய்ய நகராட்சி நிதி நிலை கருத்தில் கொண்டு முழு மானியத் தொகை அனுமதித்து வழங்க விரிவான பிரேரணை தயார் செய்து அனுப்ப உத்தேசிக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் 2019-2020 ம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற சாலை உட்கட்டமைப்பு நிதியின் கீழ் கீழ்க்கண்ட சாலைகளை மேம்படுத்தவும். அதற்காக தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | பணிகளின் பெயர் | தார் சாலையின் நீளம் "கி.மீ " | தார் சாலையின் அகலம் "மீட்டரில்" | மதிப்பீட்டுத் தொகை (ரூ.லட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 1 | கழுகுமலை சாலை முதல் திருவேங்கடம் சாலை வரை(Diversion Road) மற்றும் கக்கன்நகர் 4வது தெரு சாலை தேனப்பபுரம் சாலை மேம்பாடு அமைத்தல் | 2.47 | 7.50 | 200.00 |
| 2 | பாலசுப்பிரமணியம் சாலை முதல் ரயிவே பீடர் சாலை வரை,காவேரி நகர், கச்சேரி ரோடு வரை சாலை அமைத்தல் | 2.35 | 8.00 | 198.00 |
| 3 | வார்டு எண்:30 ஏ.வி.ஆர்.எம்.வி. சாலை, பாரதியார் 6,7,8 மற்றும் திருவுடையான் சாலையில் இருந்து பிரிந்து இலவன்குளம் சாலை வரை செல்லும் பாரதியார் 8ம் தெரு, திருவுடையான் சாலை 1ம் தெரு பாரதியார் சாலை (சிவா நர்சரி பள்ளி சாலை) தேனப்பபுரம் பாட்டத்துார் உட்புற சாலைகள் அம்மன் சன்னதி, ஆகிய சாலைகள் அமைத்தல் | 2.65 | 7.00 | 195.00 |
| 4 | வார்டு எண்:30 ரயில்வே பீடர் சாலை (காளியப்ப நாடார் காம்பவுண்டு) மற்றும் ஏ.வி.ஆர்.எம்.வி. காலனி உட்புறம் சாலைகள், குருநகர், மீரான் சேட்காலனி லட்சுமியாபுரம் 5ம் தெரு மற்றும் கீழ் பகுதி புதமனை தெரு, ராஜா காம்பவுண்டு, தெரு தார் சாலை மேம்பாடு செய்தல் | 3.15 | 6.00 | 199.00 |
| 5 | சபாபதி நகர், லட்சுமியாபுரம், பி.எஸ்.நகர், காமராஜ் நகர்,லட்சுமியாபுரம் கீழ் பகுதி, முத்துராமலிங்கம் தெரு, ஆதிசங்கர விநாயகர் கோவில் தெரு தார்சாலை மேம்பாடு செய்தல் | 2.96 | 6.00 | 190.00 |

| | | | | |
|---|---|---|---|---|
| 6 | ரயில்வே பீடர் குறுக்கு சாலை 1 மற்றும் 2, லெட்சுமியாபுரம் கீழ் 7ம் தெரு, காவேரி நகர் உட்புறம் கணபதி நகர் 1,2,3 மற்றும் ரயில்வே பீடர் குறுக்கு சாலையில் வடிகால் மற்றும் தார் தளம் அமைத்தல் | 3.00 | 5.00 | 200.00 |
| 7 | சிவந்திவாசல்,கக்கன் நகர், லெட்சுமியாபுரம் 1,2 மற்றும் 3ம் தெரு, கணபதி நகர் 4ம் தெரு மற்றும் பிரதானசாலை கோமதிநகர் 1ம் தெரு, பாரதியார் 7ம் தெரு இணைப்பு சாலை மற்றும் கோமதியாபுரம் புது 1ம் தெரு தார்சாலை அமைத்தல் | 3.00 | 6.00 | 200.00 |
| 8 | கக்கன்நகர் 2வது தெரு புதுமனை 3,4 மற்றும் 5வது கீழ்மேல் தெரு, பி.எஸ்.நகர் (பள்ளி சாலை) ஓடை தெரு (தெப்பகுளம் சாலை)தார் சாலை அமைத்தல். | 1.10 | 5.00 | 118.00 |
| | மொத்தம் | 20.690 கி.மீ | | 1500<br>15.00 கோடி |

மேற்கண்ட பழுதடைந்த சாலைகளை ரூ 1500.00/- லட்சம் மதீப்பீட்டில் 2019-2020-ம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற சாலை உட்கட்டமைப்பு நிதி அல்லது வேறு ஏதேனும் திட்டத்தின் கீழ் அரசின் முழு மான்யத்தின் கீழ் மேம்படுத்தும் பணிகள் மேற்கொள்ள சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு பிரேனைண அனுப்ப மன்றம் அனுமதிக்கு.

**தீர்மான எண் 729 அனுமதிக்கப்பட்டது,**

பொருள் எண் – 730

சங்கரன்கோவில் நகராட்சிக்கு பாத்தியப்பட்ட கடைகளின் உரிமம் கீழ்க்கண்டவாறு முடிவடைந்துள்ளது. நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை அரசாணை எண்.92 நாள்.3.7.2007 அரசாணையில் கடைகளின் உரிமம் ஒன்பது ஆண்டுகள் முடிவடைந்த பின்னர் குத்தகை வாடகை மறுமதிப்பீடு செய்யப்பட வேண்டும் எனவும் தற்போதைய குத்தகைதாரருக்கு தற்போதைய அங்காடி மதிப்பின் அடிப்படையிலான திருத்தி அமைக்கப்பட்ட குத்தகை வீதத்தில் மேற்கொண்டு 9 ஆண்டுகளுக்கு குத்தகை கால அளவை நீடித்துக்கொள்ள முன்னுரிமை அளிக்கலாம். அவர் ஒப்புக்கொள்ளவில்லை எனில் அச்சொத்து பொதுஏலத்தின்மூலம் குத்தகைக்கு விடப்படவேண்டும் என உத்தரவிடப்பட்டுள்ளது. மேற்படி அரசாணையின் அடிப்படையில் 9 ஆண்டு குத்தகை முடிவடைந்த கடைகளின் வாடகை மறு மதிப்பீடு செய்ய குத்தகை சொத்துக்கான நில மதிப்பீட்டினை பதிவு துறையிலிருந்து பெற்று பொதுப்பணித்துறையால் நிர்ணயம் செய்யப்பட்ட விகிதப்படி வாடகை நிர்ணயம் செய்து, அதனை அரசாணைப்படி அங்காடிமதிப்பீட்டில் நிர்ணயம் செய்ய தெரிவிக்கப்பட்டுள்ளதால் மேற்படி அரசாணையின் அடிப்படையில் 9 ஆண்டு குத்தகை முடிவடைந்த கடைகளின் வாடகை மறு மதிப்பீடு செய்ய நகரமைப்பு ஆய்வாளர், பணிமேற்பார்வையாளர், மற்றும் வருவாய் ஆய்வாளர் ஆகியோர்கள் கொண்ட குழுக்கள் மூலம் பதிவுத்துறை அலுவலகத்தில் நில மதிப்பீட்டுச்சான்று பெற்று அங்காடி மதிப்பீட்டின்படி மாத கடைவாடகை மறு நிர்ணயம் செய்ததையும், மேற்படி கடைக்கான உரிமத்தை புதுப்பிக்க வைப்புத்தொகையாக ஒருவருட வாடகைத்தொகை பெற்று மேலும் மூன்றாண்டுகளுக்கு உரிமம் புதுப்பித்து வழங்கவும் மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

**தீர்மான எண் 730 அனுமதிக்கப்பட்டது,**

பொருள் எண் – 731

இந்நகராட்சி பொதுசுகாதார பிரிவில் உள்ள கூசூ76று0408 டம்பர்லாரி (குஊ) வாகனத்திற்கு தகுதி சான்று பெறுவதற்கு வாகனத்தின் பழுது வேலைகள் செய்வதற்கு 02.08.2019ந் தேதியில் கீழ்க்கண்ட விபரப்படி ஒப்ந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | விலை விபரம் |
|---|---|---|
| 1. | முருகா மோட்டார் ஒர்க்ஸ், 3/514, தென்காசி | ரூ.45000/– |
| 2. | மூசா இஞ்சினியரிங் ஒர்க்ஸ், தென்காசி | ரூ.46800/– |

மேற்கண்ட இரண்டு ஒப்ந்தப்புள்ளிகளின் வரிசை எண்.1ல் உள்ள முருகா மோட்டார் ஒர்க்ஸ் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி குறைவாக கொடுத்துள்ளனர். எனவே 10.08.2019ல் தகுதிச்சான்று முடிவடைவதாலும், பொதுசுகாதார அவசியம் கருதியும், வாகனத்தின் பழுதுவேலைகள் செய்யப்படவேண்டியிருப்பதாலும், தனிஅலுவலரின் முன்அனுமதி பெற்று குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள முருகா மோட்டார் ஒர்க்ஸ் நிறுவனத்.ன் ஒப்பந்தப்புள்ளியை ஒப்புக்கொண்டு நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதிக்கலாம். (1418/2018/எச்1)

**தீர்மான எண் 731 அனுமதிக்கப்பட்டது,**

**நாள் 09.08.2019**

**தனிஅதிகாரி மற்றும்**
**ஆணையாளர்,**
**சங்கரன்கோவில் நகராட்சி.**